9. வாருங்கள் போங்கள்

ச. இராசேந்திரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

முகவாசல்

வா, போ என்பன நட, ஓடு என்பன போல முன்னேற்றச் சலனத்தைக் குறிப்பிடும் வினைகளாகும். ஆனால் வா, போ என்பன கருத்துப் பரிமாற்றச் சூழலில் கூடுதலான செய்திகளை உணர்த்தும். கீழே தரப்பட்டுள்ள இரண்டு வாக்கியங்களும் பொருள் அடிப்படையில் ஒன்றல்ல.

எ.கா. 1

1. நான் நேற்று காலை கல்லூரிக்குப் போனேன்
2. நான் நேற்று காலை கல்லூரிக்கு நடந்தேன்.

முதல் வாக்கியம் கீழே தந்துள்ள வாக்கியத்தைத் தொகுகருத்தாக (*entailment*) உணர்த்தும், ஆனால் இரண்டாவது வாக்கியம் இதை உணர்த்தாது.

எ.கா. 2

நான் நேற்று காலையில் கல்லூரியில் இருந்தேன்.

வா, போ என்பனவற்றிற்கு முறையே 'ஒன்றை நோக்கி இடம் பெயர்தல்', 'ஒன்றிலிருந்து இடம்பெயர்தல்' என்று பொருள் தருவது அவ்வளவு பொருத்தமாயிராது. வா, போ என்பவற்றின் பொருள்கோள் கருத்துப்பரிமாற்றத்தில் பங்கு கொள்ளும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடம், இடம், காலம், இவற்றின் சுட்டல் (*deictic*) தன்மையில் அமைந்த முற்கோள் மற்றும் அனுமானம் ஆகியவற்றின் அடிப்படையில் அமையும். தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்கள் அடிப்படையிலான சுட்டல் பேசுபவரையும் கேட்பவரையும் உள்ளடக்கும். இடம் அடிப்படையிலான சுட்டல் செயல் நிகழும் இடம், உரை நிகழும் இடம் இவற்றை உள்ளடக்கும். காலச்சுட்டல் செயல் நிகழும் காலம், உரை நிகழும் காலம் இவற்றை உள்ளடக்கும். (செல் என்ற வினையும் போ என்ற வினையைப் போல பொருள் தரும். ஆனால் செல் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படாத சொல். ஆகையால் இங்கு இச்சொல் பற்றி பேசப்படவில்லை.)

மூவிடம் மற்றும் சேருமிடம்

பேச்சு நிகழ்வில் பங்கெடுப்போர் என்ற நிலையில் பேசுபவரும் கேட்பவரும் வா, போ பயனிலையாய் வரும் வாக்கியங்களின் பொருள் கொள்ள முக்கியத்துவம் வகிப்பர். பின்வரும் வாக்கியங்கள் மேற்சொன்ன செய்தியைத் தெளிவு படுத்தும்.

எ.கா. 3

1. நான் (இங்கே) வந்தேன்
2. நீ (இங்கே) வந்தாய்
3. அவன் (இங்கே) வந்தான்

பேசுபவர் வா என்ற வினையின் எழுவாயாக வந்தால் பேசுபவர் கேட்பவர் இருக்கும் இடம் நோக்கி சலனம் செய்ததாயும், கேட்பவர் வா என்ற வினையின் எழுவாயாக வந்தால் கேட்பவர் பேசுபவர் இருக்கும் இடம் நோக்கிச் சலனம் செய்ததாயும், படர்க்கை எழுவாயாக அமைந்தால் படர்க்கை பேசுபவர் மற்றும் / அல்லது கேட்பவர் இருக்கும் இடம் நோக்கிச் சலனம் செய்ததாயும் அனுமானம் செய்யலாம்.

எழுவாய்		போய்ச்சேருமிடம்
பேசுபவர்	வா →	கேட்பவர்
கேட்பவர்	வா →	பேசுபவர்
படர்க்கை	வா →	பேசுபவர் / கேட்பவர்

இதேபோல் **போ** என்ற வினையைப் பயன்படுத்துகையில் மூவிடம், போய்ச்சேருமிடம் என்பதன் அடிப்படையில் அனுமானங்கள் செய்யலாம்.

எ.கா. 4

1. நான் (அங்கே) போனேன்.
2. நீ (அங்கே) போனாய்
3. அவன் அங்கே போனான்

பேசுபவர் **போ** என்ற வினையின் எழுவாயாக வந்தால் பேசுபவர், கேட்பவர் இருக்கும் இடம் நோக்கிச் சலனம் செய்யவில்லை என்றும், கேட்பவர் **போ** என்ற வினையின் எழுவாயாக வந்தால் கேட்பவர், பேசுபவர் இருக்கும் இடம் நோக்கிச் சலனம் செய்யவில்லை என்றும், படர்க்கை போ

என்ற வினையின் எழுவாயாக வந்தால் படர்க்கை, பேசுபவர் மற்றும் அல்லது / கேட்பவர் இருக்கும் இடம் நோக்கிச் சலனம் செய்யவில்லை என்றும் அனுமானம் செய்யலாம்.

எழுவாய்		போய்ச்சேருமிடம்
பேசுபவர்	போ →	கேட்பவர்
கேட்பவர்	போ →	பேசுவபர்
படர்க்கை	போ →	பேசுபவர் / கேட்பவர்

→ = நோக்குகை; ↛ = நோக்காமை

இம். காலம். சேருமிடம்

நாம் முன்னர்க் கண்டபடி இடச்சுட்டலில் உரை நிகழுமிடமும், செயல் நிகழுமிடமும் அடங்கும். காலச்சுட்டலில் உரை நிகழும் காலமும் செயல் நிகழும் காலமும் அடங்கும்.

எ.கா. 5

1.1 நான் இங்கே வந்தேன்.

1.2 நீ இங்கே வந்தாய்

1.3 அவன் இங்கே வந்தான்

(பேசுபவரும் கேட்பவரும் உரை நிகழும் காலத்தில் செயல் நிகழ்ந்த இடத்தில் இருக்கிறார்கள்).

2.1 நான் அங்கே வந்தேன்

2.2 நீ அங்கே வந்தாய்

2.3 அவன் அங்கே வந்தான்

(பேசுபவரும் கேட்பவரும் உரை நிகழும் காலத்தில் செயல் நிகழ்ந்த இடத்தில் இல்லை)

3.1 * நான் இங்கே போனேன்

3.2 * நீ இங்கே போனாய்

3.3 * அவன் இங்கே போனான்

(சாதாரண சூழலில் இங்கே என்பது போ என்பதுடன் சேர்ந்து வராது)

4.1 நான் அங்கே போனேன்

4.2 நீ அங்கே போனாய்

4.3 அவன் அங்கே போனான்

(பேசுபவரும் கேட்பவரும் உரை நிகழும் காலத்தில் செயல் நிகழ்ந்த இடத்தில் இல்லை)

மேற்கண்ட எடுத்துக்காட்டில், முதல் குழுவில் வரும் வாக்கியங்கள் பேசுபவரும் கேட்பவரும் உரை நிகழும் காலத்தில் செயல் நிகழ்ந்த இடத்தில் இருக்கிறார்கள் என்று அனுமானம் செய்யவும், இரண்டாவது மற்றும் நான்காவது குழுவில் வரும் வாக்கியங்கள் பேசுபரும் கேட்பவரும் உரை நிகழும் காலத்தில் செயல் நிகழ்ந்த இடத்தில் இல்லை என்றும் அனுமானம் செய்யவும் வழிவகுக்கும். மூன்றாவது குழுவில் வரும் வாக்கியங்கள் முன் நட்சத்திர அடையாளம் இடப்பட்டுள்ளதன் காரணம் அவை அவ்வளவு சரியான வாக்கியங்களல்ல என்பதைக் குறிப்பிடத்தான். ஏனென்றால், சாதாரண சூழலில் இங்கே என்பது போ என்பதுடன் சேர்ந்து வராது. மூன்றாவது சூழலில் வரும் வாக்கியங்கள் கைகொண்டு சுட்டிக்காட்டும் இடங்களில் அல்லாமல் பிற இடங்களில் வராது. எனவே இங்கே என்பதைப் பேசுபவரும் கேட்பவரும் வந்த இடமாக கொள்ள வேண்டும். போன இடமாகக் கொள்ளக்கூடாது.

எ.கா. 6

1. அவன் நேற்று இங்கே வந்தான்
2. அவன் நேற்று இங்கே வந்தான், அப்பொழுது நான் இங்கே இல்லை.

மேற்கண்ட இரண்டு வாக்கியங்களை ஒப்பிடும் போது செயல் நிகழும் காலமும் உரை நிகழும் காலமும் வேறுபடும் என்று தெரியவரும். அவன் செயல் நிகழும் காலத்தில் செயல் நிகழும் இடத்தில் இருக்கையில் பேசுபவர் செயல் நிகழும் இடத்தில் இல்லாதிருக்கலாம், அவன் செயல் நிகழும் இடத்திற்கு உரை நிகழும் காலத்தில் வந்திருக்கலாம்.

எ.கா. 7

1. நான் நேற்று கல்லூரிக்கு வந்தேன்.
2. நீ நேற்று கல்லூரிக்கு வந்தாய்
3. அவன் கல்லூரிக்கு வந்தான்
4. நான் நேற்று கல்லூரிக்குப் போனேன்
5. நீ நேற்று கல்லூரிக்குப் போனாய்
6. அவன் கல்லூரிக்குப் போனான்

பேசுபவர் சனனத்தில் எழுவாயாக வருதல்

பேசுபவர் சனனத்தின் எழுவாயாக வந்தால் வா, போ, பயன்பாடு பின் வருமாறு அமையும்.

1. உரை நிகழும் இடமும் செயல் நிகழும் இடமும் ஒன்றாய் இருந்தால் வா பயன்படுத்தப்படும்.

2. உரை நிகழும் இடமும் செயல் நிகழும் இடமும் வேறுபட்டால் வா, போ பயன்பாடு பின்வருமாறு அமையும்.

2.1. பேசுபவர் கேட்பவரைச் செயல் நிகழும் இடமும் இடத்தில் செயல் நிகழும் காலத்தில் பார்த்தல் / எதிர்பார்த்தல் என்ற நிலையில் வா பயன் படுத்தப்படும்.

2.2. பேசுபவர் கேட்பவரைச் செயல் நிகழும் இடத்தில் செயல் நிகழும் காலத்தில் பார்த்தல் / எதிர்பார்த்தல் இல்லை என்ற நிலையில் போ பயன்படுத்தப்படும். இந்தச் சூழலிலும் செயல் நிகழும் இடம் வழக்கமாக வாழ்விடமாக இருந்தால் வா பயன்படுத்தப்படும்.

பின்வரும் வாக்கியங்கள் மேற்கண்ட கூற்றுகளைத் தெளிவுபடுத்தும். (பின்வரும் வாக்கியங்களில் உரை நிகழும் இடமும் செயல் நிகழும் இடமும் வேறுபடும்).

எ.கா. 8

1. நான் கல்லூரிக்கு வருவேன். (அங்கே நீ இருப்பாய் என்று எண்ணுகிறேன்)
2. நான் நேற்று கல்லூரிக்கு வந்தேன் (ஆனால் நீ அங்கே இல்லை)
3. நான் நேற்று கல்லூரிக்கு வந்தேன் (நீ அங்கே இருந்தாய்)
4. நான் நாளை கல்லூரிக்குப் போவேன் (நீ அங்கே இருக்க மாட்டாய் என்று எண்ணுகிறேன்)
5. நான் நேற்று கல்லூரிக்குப் போனேன். (நீ அங்கே இல்லை)
6. நான் (நீ இல்லாத போது) உன் வீட்டிற்கு வருவேன்.
7. நாம் நிச்சயித்திருந்த படிக்கு நான் தியேட்டருக்கு வந்தேன். (நீ அங்கே இல்லை).

மேற்கண்ட எடுத்துக்காட்டு, வாக்கியங்களில் 1,2,3,7 ஆகியவற்றில் பேசுபவர் கேட்பவரைச் செயல் நிகழ்ந்த இடத்தில் எதிர்பார்த்ததால் அல்லது பார்த்ததால் அவர் வா என்ற வினையைப் பயன்படுத்தினார். வாக்கியங்கள் 4, 5 ஆகியவற்றில் பேசுபவர் கேட்பவரைச் செயல் நிகழ்ந்த இடத்தில்

எதிர்பார்க்காததால் அல்லது பார்க்காததால் போ என்ற வினையைப் பயன்படுத்தினார். வாக்கியம் 7-இல் பேசுபவர் கேட்பவர் வாழ்விடம் அல்லது பொதுவாகக் காணப்படும் இடம் நோக்கிச் சலனம் செய்வதால் வா என்ற விளையைப் பயன்படுத்தினார். இறுதி இரண்டு எடுத்துக்காட்டுகளும் பேசுபவர் கேட்பவர் இருக்கும் இடம் நோக்கிச் சலனம் செய்தார் என்ற அனுமானத்திற்கு எதிரிடையாக வரவில்லை. ஏனென்றால் பேசுபவரின் சலனம் கேட்பவர் இருப்பதாக எதிர்பார்க்கப்படும் இடம் அல்லது வாழ்விடமாக அமைகிறது. பின்வரும் காரணிகள் வா, போ பயன்பாட்டை நிர்ணயிக்கின்றன.

1. கேட்பவர் செயல் நிகழும் இடத்தில் இருப்பார் அல்லது இல்லாமலிருப்பார் என்பது குறித்த பேசுபவரின் எதிர்பார்ப்பு
2. செயல் நிகழும் இடம் கேட்பவர் வாழ்விடமாக அமைதல்
3. உரை நிகழும் இடமும் செயல் நிகழும் இடமும் வேறுபட்டால் செயல் நிகழும் காலத்தில் பேசுபவர் இருக்குமிடம் பற்றிய அனுமானம்
4. உரை நிகழும் இடமும் செயல் நிகழும் இடமும் ஒன்றாக இருந்தால் பேசுபவர் மற்றும் கேட்பவர் செயல் நிகழும் இடத்தில் இருத்தல் (இது வரை நிகழும் காலத்தில்தான் அனுமானிக்கப்படும். செயல் நிகழும் காலத்தில் அனுமானிக்கப்படாது.).

கேப்வர் சனைத்தின் எழுவாயாக வருதல்

சலனத்தின் எழுவாயாக கேட்பவர் வருகையில் அச்சூழல் பேசுபவர் சலனத்தின் எழுவாயாக வரும் சூழலின் மறுதலை என்று கூறமுடியாது. இங்கு வா, போ பயன்பாடு பின்வருமாறு அமையும்:

1. உரை நிகழும் இடமும் செயல் நிகழும் இடமும் ஒன்றாய் இருந்தால் வா பயன்படுத்தப்படும்.
2. உரை நிகழும் இடமும் செயல் நிகழும் இடமும் வேறாய் இருந்தால் வா, போ பயன்பாடு பின்வருமாறு அமையும்.
   2.1. பேசுபவர் தான் செயல் நிகழும் இடத்தில் செயல் நிகழும் காலத்தில் இருத்தலை அல்லதுஅவ்வாறு எதிர்பார்த்தலைத் தெரிவிக்கையில் வா பயன் படுத்தப்படும்.

2.2. பேசுபவர் செயல் நிகழுமிடத்தில் செயல் நிகழும் காலத்தில் தான் இல்லாமையை அல்லது அவ்வாறு எதிர்பார்த்தலைத் தெரிவிக்கையில் போ பயன்படுத்தப்படும்.

படர்க்கை சலனத்தின் எழுவாயாக வருதல்

படர்க்கை சலனத்தின் எழுவாயாக வருவதானால் சலனச்சூழல் கேட்பவரின் சலனச்சூழல் போலவே அமையும். ஆனால் எங்கெல்லாம் செயல் நிகழும் இடத்தில் பேசுபவர் இருந்தமை அல்லது இல்லாமை அனுமானிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் கேட்பவர் இருந்தமை அல்லது இல்லாமையும் அனுமானிக்கப்படும். இளையமைப்புப்படம் - 3 படர்க்கையின் சலனத்தைப் பேசுபவர், கேட்பவர், செயல் நிகழுமிடம், செயல் நிகழும் காலம், உரை நிகழுமிடம், உரை நிகழும் காலம் இவற்றுடன் தொடர்புபடுத்திக் காட்டும். இங்கு தொகுகருத்து "படர்க்கை செயல் நிகழும் காலத்தில் செயல் நிகழுமிடத்தில் இருந்தார் அல்லது இருப்பார்" என்பதாகும்.

புறவாசல்

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து வா, போ இவற்றின் பயன்பாடு கருத்துப்பரிமாற்றத்தில் பங்கெடுக்கும் நபர், இடம், காலம் அடிப்படையில் அமைகிறது என்ற முடிவுக்கு வரலாம். வா, போ பயன்படுத்துகையில் மூவிடம், செயல் நடக்குமிடம், செயல் நடக்கும் காலம், உரை நடக்குமிடம், உரை நடக்கும் காலம் இவற்றைப் பொறுத்து எவ்விதமான தொகுகருத்துகள், முற்கோள்கள், அனுமானங்கள் செய்யலாம் என்று பார்த்தோம். தமிழ் வா, போ என்பனவற்றிற்கு இணையாக ஆங்கிலத்திலும், இந்தியிலும் முறையே *coming and going, aanaa aur jaanaa* என்பனவற்றைக் கூறலாம். மொழியைத்தாண்டி இவற்றை ஆய்கையில் பல முக்கியமான செய்திகள் வெளிப்படும். மொழிபெயர்ப்பின் போது சிக்கலை உருவாக்கும் வினைகளும் இவைதான். வா, போ இவற்றைத் தருக்கரீதியிலும் பயன்வழியியல் (*pragmatics*) அடிப்படையிலும் ஆய்ந்தால் பல புதிய செய்திகள் வெளிப்படும்.

துணை நூல்கள்

1. *Annamalai, E. 1975. 'The Semantics of the verbs vaa and poo in Tamil',* ***Indian Linguistics*** *36:3/212-216.*

2. *Fillmore, Charles. 1966. 'Deictic Categories in the Semantics of Come'.* ***Foundation of Language*** *2:3.219-227.*

3. _____*1970. 'Subjects, Speakers and Roles'.* ***Synthese*** *21.251-274.*

4. _____*1971.' Towards a Semantic Theory of Deixis'.* ***Working Papers in Linguistics*** *3:4.219-242.*

5. _____*1973. 'May we come in'?* ***Semiotica*** *9.97-116.*

6. *Gathercole, Virginia, C.1977. 'A Study of the comings and goings of the speakers of four languages: Spanish, Japanese, English and Turkish'.* ***Kansas Working Papers in Linguistics*** *2.61-94.*

7. *Gathercole, Virginia, C. 1978. 'Towards a universal for deitic verbs of motion'.* ***Kansas Working Papers in Linguistics*** *3.72-88.*

8. *Leech, Geoffery N. 1969.* ***Towards a Semantic Theory of English****, Longmans.*

9. *Lyons, John. 1977.* ***Semantics*** *(Vol 1 & 2). Cambridge University Press : Cambridge.*

10. *Rajendran, S. 1978. Syntax and Semantics of Tamil Verbs (Unpublished Ph.D. Thesis). Poona University, Poona.*

11. *Rajendran, S. 1983. 'Coming' and 'Going' in Tamil. In Pattanayak, D.P. & Annamalai, E. (ed.). To Greater Heights Part I. Central Institute of Indian Languages. 93-118.Mysore:*

12. *Sinha, Anjanikumar. 1972. On the Deitic Use of 'coming' and 'going' in Hindi. Papers from the Eighth Regional Meeting, Chicago Linguistic Society, Chicago, 351-358.*

13. *Wilkins, David P. and Hill, Deborah. 1995. When "go" means "come": Questioning the basicness of basic motion verbs.* ***Congnitive Linguistics*** *6-2/3, 209-259.*